# குருபூசை விழா மலர்

## சிரீ ல சிரீ முத்தையதேசிக சுவாமிகள்

## குமாரபுரி-திருவளவனூர்
## 15-08-2015
## ஆடி மகம் நட்சத்திரம்



| |
|---|
| இறைபணிக்காக.. |
| சிரீ தாசர் சுவாமி அன்பர்கள் |
| சதாசிவ பிரும்மேந்திரர் குடில் |
| சாலையாம்பாளையம் |



# செந்தமிழில் வாழ்வியல் சடங்குகள்

நம் நாட்டில் மனிதன் பிறந்தாலும் சடங்கு உண்டு, நிறைவுற்றாலும் சடங்கு உண்டு. இடையில் வாழ்வில் முக்கியமாக எது நிகழ்ந்தாலும் சடங்கு உண்டு. ‘சடங்கு’ என்றால் வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளைச் செவ்விதமாக ஓர் ஒழுங்கு முறையாக அழகாகச் செய்விக்கும் தன்மை உடையது என்று பொருள்.

சடங்குகள் வாழ்வு முறைதலுக்கு பாதுகாப்பு அளிப்பது. எப்படி எனில் இறைவனை முன்னிறுத்தி செய்பவை, இதனால் ஒருவருக்கு பாதுகாப்பு ஏற்படுகிறது. எனவே சடங்குகள் மதிக்கப்பட வேண்டியவை. அவை மதிப்பு பெறுவது நமது தாய்மொழியான “செந்தமிழில் மந்திரங்கள்” ஆற்றப்படும் போது அவற்றின் ஊடே பொதிந்த அறிவார்ந்த பொருள் வெளிப்பட்டு மின்னி இன்பம் பயக்க, சடங்குகளுக்கு மதிப்பு கூடியது.

செந்தமிழில் **முப்பதாயிரத்திற்கும்** மேற்பட்ட ஆற்றல் மிக்க மந்திரங்கள் இறைவனை போற்றி பாடவும், தமிழ் சடங்குகளை செய்யவும் நம் தமிழ் அருளாளர்களால் தோற்றுவிக்கப்பட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன. ஆகவே தமிழர்கள் பின்வரும் வாழ்வியல் சடங்குகளை தமிழ் மொழியிலேயே **“தமிழ் மந்திரங்கள்”** ஓதி **“தமிழ் ஆகமப்படி”** ஆற்றுவதே இன்றைய தேவை.

| |
|---|
| **தொட்டிலிட்டு குழந்தைக்கு பெயரிடல், மகவுக்கு உணவூட்டல், வாழ்நாள் வேள்வி, குருத்துமுடி கழித்தலும் காதணி விழாவும், எழுத்தறிவித்தல், மஞ்சள் நீராட்டு விழா, திருமண உறுதி விழா (நிச்சயதார்த்தம்), திருமுறைத் திருமணம், வளைகாப்பு கால்கோள் விழா, (பூமி பூசை) கணபதி/அம்மையப்பர் வேள்வி (ஹோமம்), புதுமனை புகுவிழா, மணி, பவள, முத்து விழா சிவ பூசை மற்ற அனைத்து வாழ்வியல் சடங்குகள்** |
| (எஸ்.ஆர்.எம்) பல்கலைக்கழக தமிழ் அருட்சுனைஞர்-பட்டயம்” தங்கள் வீட்டு சடங்கை நடத்தி தர தங்கள் பகுதியில் தொடர்பு கொள்ள வேண்டியவர் “செந்தமிழ் ஆகம அந்தணர்கள்” |

| | |
|---|---|
| சிவ.க.சிவக்குமார் D.T.Arut., | 9943088166 |
| சிவ.தே.ந.செல்வமுத்துகுமரன் D.T.Arut., | 9994323913 |
| சிவ.தி.புகழேந்தி D.T.Arut., | 9003466413 |
| சிவ.தி.மணிமாறன் D.T.Arut., | 8124345311 |
| சிவ.சா.சதீஷ்குமார் D.T.Arut., | 9092573615 |
| சிவ.ப.வினோத்குமார் D.T.Arut., | 8124019535 |



RangaRakes
tamilnavarasam.com



# தலைப்புரை

வளவனூரின் நான்கு திசைகளிலும் மகான்களின் ஜீவசமாதி (உயிர்நிலைக்கோயில்) உள்ளது. வண்ணச்சரபம் தண்டபானி சுவாமிகள் தங்கி தவம் இருந்த ஊர். அவர்களின் "செக்கோசை குன்றாதோ, சிவனோசை பெருகாதோ" என்ற கூற்றிற்கேற்ப 25/03/2003 – ல் அருள்திரு தாசர் சுவாமிகளின் குருநாதர் பிரும்ம ஞானி சத்குரு சிரீ சதாசிவ பிரும்மேந்திரர் வளவனூர் வருகையின்போது அருளுரையில்: வருக...வருக... என வரவேற்று வரவேற்பு பத்திரமும் கொடுத்த வளவனூர் மக்களை, "சர்வேசுரனை எப்படி தினம் தினம் மனதினாலே எண்ணுகிறேனோ, அதுபோன்று மறக்கவே மாட்டேன்" என்று தொடங்கி பேசினார்கள். அவ்வளவு சிறப்புாக அருள்திரு தாசர் சுவாமிகளின் தவப்பயன் வளவனூர் பகுதியில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. ஊருக்கு அருகாமையில் வயல்வெளியில் அமர்ந்து கொண்டு சிறப்பாக இறைவனை உணர்த்தி வருகிறார்.

அருள்திரு தாசர் சுவாமிகள் குருநாதருக்கு வரவேற்பு பத்திரம்
வாசித்துக் கொடுத்தபோது அதில்
"முத்தமிழ்ச்செல்வியே மூண்டிடவா" எனத் தொடங்கி
எத்தனை எத்தனை எழுதினும் போதா(து)
அத்தனை உயிர்களின் அருள்நிறை வேதா
"பெற்றது பாக்கியம் திருவளவனூரே"
சித்தனுன் திருவடி இன்றிம் மண்மீதே

என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஞானிகள்தனது உரையில்,"தாசரை இறைவன் ஒருவாய்ப்பாக கொடுத்திருக்கிறான்". இந்த உலகத்தில் அவருக்கு ஆக வேண்டியது ஒன்றுமே இல்லை அவரை விட்டால் தவத்தில் ஆழ்ந்துவிடுவார்கள் அதனால் அடிக்கடி சந்தியுங்கள். "வாய்க்காலிலே துள்ளி ஓடுகின்ற



RangaRakes

மீன்களாக தாசர் அவர்களை பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சதாசிவ பிரும்மேந்திரர் நமக்கு தகவல் கொடுத்ததற்கு ஏற்ப, அருள்திரு தாசர் சுவாமிகள், இறை உணர்வை நாம் தெரிந்து கொள்ளவும், இறை மந்திரங்கள் என்ன என்பதை நமக்கு உணர்த்தவும் ஞாயிறுதோறும் அருளுரை வகுப்பு எடுத்து வருகிறார்கள். ஆன்ம தாகம் உள்ள அன்பர்களும், பக்தர்களும் தாசர் சுவாமிகளை பயன்படுத்திக் கொண்டு ஆன்ம லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்துப்
பண்ணுறத் தெரிந்துஆய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சிலஇலக்கணவரம்பிலாமொழிபோல்
எண்ணிடைப்படக் கிடந்ததாஎண்ணவும் படுமோ"

தமிழுக்குச் சங்கம் கண்டதும் இறைவனாகிய சிவபெருமான்தான் என்று தமிழிலக்கியங்களுள் ஒன்றான, பரஞ்சோதியார் பாடிய திருவிளையாடற்புராணம் கூறுகிறது. சங்கம் கண்ட பின் தமிழ்ப் புலவர்களோடு புலவராக இருந்து சிவபெருமான் தமிழை ஆய்ந்தாராம். அதிலும் தமிழ்ப் புலவர்கள் அமர்ந்திருக்க, சிவபெருமான் அவர்களிடையே நின்று கொண்டிருந்தாராம்.

"மூவர்கட் கரியான் நிற்பமுத்தமிழ்த் தெய்வச் சங்கப்
பாவலர் வீற்றிருக்கும் பாண்டிநன் னாடுமாதோ"
என்று நம்பி திருவிளையாடற்புராணம் எடுத்துரைக்கிறது.

இவ்வாறு இறைவனால் படைக்கப்பட்டு, சங்கம் அமைத்து அதற்கு தானே தலைவனாக இருந்து ஒரு மொழியை ஆராய்ந்தார்கள் என்றால் அது தமிழ் மொழி மட்டுமே. இத்துணை சிறப்புவாய்ந்த தமிழில் பாடியே மாணிக்கவாசகர், சம்பந்தர், அப்பர், சுந்தரர், திருமூலர் ஆகியோர்களை உள்ளடக்கிய 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள் மற்றும் அடியார்கள் அனைவரும் தமிழில் பாடியே இறைவனை துதித்தும், இறைவனுடன் இரண்டறக் கலந்தும் உள்ளனர். இவர்களால்



tamilnavarasam.com

அருளிச் செய்யப்பட்டிருக்கும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம், திருத்தொண்டத்தொகை, நாலாயிரத் திவ்யபிரபந்தம் போன்ற நூல்கள் இறைவனை துதிக்கவும், இறைவனை தெரிந்து கொள்ளவும், திருவடியை சென்று அடையவும் வழிகாட்டுகிறது. ஏனெனில் இந்நூல்களில் உள்ள வரிகள் அனைத்தும் இறைவனால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும். உதாரணமாக மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் நூலை சிலர் ஏற்றுக்கொள்ள மறுத்தனர், இதனால் ஏற்பட்ட சர்ச்சையால் ஓலைச்சுவடி தில்லை நடராசர் பாதத்தில் வைக்கப்பட்டு நடை சாத்தப்பட்டது. மறுநாள் தில்லை நடராசரால் **"திருச்சிற்றம்பலமுடையான்"** என்று கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னரே அனைவரும் உணர்ந்தனர். இவ்வாறு அம்மையப்பர் பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழின் பெருமையையும், தமிழின் மாண்பையும் உணர்த்தியிருக்கிறார்.

இறைவனே தமிழுக்கு இவ்வளவு முன்னுரிமை கொடுக்கும் பொழுது, நாம் இறைவனை பூசை செய்வதற்கும், வேள்வி செய்வதற்கும் தமிழை பயன்படுத்தாமல் இருப்பது இறைவனையே நாம் புறக்கணிப்பது போலாகும். துதிப்பதற்கும், தொழுவதற்கும் அவரவர் தாய்மொழியே சிறந்ததாகும். ஏனென்றால் நம்முடைய சொல், மனம், செயல் ஆகிய மூன்றும் ஒரு சேர இறைவனை எண்ணவேண்டும். அதற்கு நம்முடைய தாய் மொழியே துணை நிற்கும். பிற மொழிகளில் துதிக்கும்பொழுது அர்த்தம் புரியாமல் கூறப்படும் வார்த்தைகள், வெறும் கூச்சலாகவே இருக்கும். நம்முடைய தாய் மொழி தனித்தமிழ் செம்மொழியாகும். எம்பெருமானால் படைக்கப்பட்ட தமிழினால் பெருமானை துதிக்கும்பொழுது பெருமானார் பெருமகிழ்வும், பேரின்பமும் அடைந்து அடியார்களுக்கு அருளியுள்ளார் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள்அளவிலடங்கா வண்ணம் நம்மிடையே உள்ளது. அவற்றில் சிலவற்றை உங்களிடமும் பகிர்ந்து கொள்வதனால் பெருமகிழ்வும், பேரின்பமும் அடைகின்றோம்.



RangaRakes

## சிரீதாசர் சுவாமிகள் தன்னுடைய பொங்கல் வாழ்த்துச்செய்தியில்

இறைவனைத் தமிழில் பாட, சிவபெருமான் காட்டாற்று வெள்ளத்தையே தடுத்து நிறுத்தி தம்மை வழிபட சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் சேரமான் பெருமான் நாயனாருக்கும் வழிவிடச் செய்கிறார்.

இன்னொரு பக்கம் சுட்டெரித்துவிட்ட பிணச்சாம்பலில் இருந்து பூம்பாவை என்கிற பெண்ணை மீண்டும் உயிர் பெற்று எழச் செய்கிறார் சம்பந்தர் இறைவனைத் தமிழில் பாடி !

அப்பர் பெருமானோ வெந்து நீராக்கும் சுண்ணாம்புக் கால்வாயில் ஏழு நாட்கள் இருந்து வெளியே வருகிறார். கல்லில் கட்டி கடலில் எறிய இறைவனைத் தமிழில் பாடி கல்லையே தெப்பமாக மிதக்க வைத்துக் கறையேறுகிறார்.

வேதாரண்யக் கோவில் கதவை அடைக்கப் பாடுகிறார்கள் திறக்கப் பாடுகிறார்கள் இன்னும் என்னன்னவோ அதிசயங்களைத் தமிழில் பாடி செய்து காட்டுகிறார்கள்.

ஒரு பக்கம் பெற்ற பிள்ளையைக் கறியாக சமைத்துப் போட்டு மீண்டும் உயிர் பெற்றெழ வைக்கிறார் சிறுத்தொண்டர்.

நந்தி விலகுகிறது நந்தனாருக்கு. சிவனே பூணூல் தந்து அரிசன நந்தனாரே அந்தணர் என்கிறார்.

சிவனடியாருக்கு மனைவியையே தந்து தடுத்த சுற்றத்தார் அனைவரையும் கொன்று பாதுகாக்கிறார் இயற்பகையார்.

விபூதி அணிந்தான் என்ற ஒரே காரணத்திற்காக எதிரியிடம் தெரிந்தே பலியாகிறார் வெல்லப்பட முடியாத ஏனாதி நாயனார்.



tamilnavarasam.com

பொய்வேடம் தரித்து தன்னைக் கொன்றவனை அடியார் என்று சொல்லி பாதுகாப்புத் தருகிறார் மெய்ப்பொருள் நாயனார்.

பக்தியிலும் சரி உடம்போடு கயிலாயம் ஏகுவதிலும் சரி சித்து விளையாடி இறைவனை நிரூபிப்பதிலும் சரி தமிழும் தமிழர்களும் எவரையும் விஞ்சி நிற்கின்றனர். ஆனால் என்ன பரிதாபம் , இவர்கள் பெருமை தமிழ் நாட்டைத் தாண்டவில்லை. ஏன் தமிழர்களுக்கேகூட இன்னும் முழுமையாகச் சென்று சேரவில்லை. காரணம் தமிழர்கள் கட்டிய கோவிலின் கருவறை மூலத்தானத்தில் தமிழர்கள் இல்லை. இன்னும் தமிழ் நாட்டின் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் தமிழ் நந்திக்குப் பின்னாலும் கொடிமரத்திற்குப் பின்னாலுமே நிறுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது.

நாத்திகம் பேசி ஒதுங்கிவிடுகிறவர்களுக்கு அதிகம் பொறுப்பில்லை. இறைவனை ஏற்று ஆத்திகம் பேசும் தமிழர்களுக்கே மிகப் பெரிய பொறுப்பு காத்துக்கொண்டிருக்கிறது.

63 நாயன்மார்கள் அனைத்து சாதியினர். பெரும்பாலோர் பிராமணரல்லார். குறைந்தபட்சம் கோவில்களில் உள்ள நாயன்மார்கள் சிலைகளுக்கு மாத்திரமாவது அனைத்து சாதியினரும் தாங்களே பூசைகள் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

சாதி கோவில்களில் ஒழிந்தால் சமுதாயத்தில் தாமாகவே மறைந்துவிடும். நமது சிறப்பையும் நமக்கு இருக்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பையும் இந்த தமிழர் திருநாள் நமக்கு உணர்த்தும் என்று நம்புகிறேன் .

இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள் !

ஓம் - பிரும்மேந்திர தாசன்



RangaRakes

**தேவர் குறளும் திருநாள் மறை முடியும்**
**மூவர் தமிழும் முனிமொழியும்– கோவைத்**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவாசகம் என்று உணர்.**

கருவறையில் நிகழ்த்தப்படும் அருச்சனை என்பது ''தமிழ் இசையால் பாடுவதே' என்பதை சுந்தரர் வரலாற்றில் வைத்துச் சேக்கிழார் புரட்சி செய்தார்.

''நாளும் இன்னிசை யால் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தன்', ''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் நாவினுக்கு அரையன்' என்ற சுந்தரர் பதிவுகள் அன்னார் இருவரும் சைவத்தின் பெயரால் தமிழ் வளர்த்த திறம் உரைத்தன.

நம்முடைய (தமிழர்களின்) செல்வமாக விளங்குவதும், நமக்கு எல்லா செல்வங்களையும் அளிப்பது எது ?

**செல்வமல்கிய செல்வர் பராய்த்துறைச்**
**செல்வர் மேல் சிதை யாதன**
**செல்வன் ஞான சம்பந்தன் செந்தமிழ்**
**செல்வமாம் இவை செப்பவே**

+++++++++

**'கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன் சம்பந்தன் சொல்**
**மடியாது சொல்ல வல்லார்க்கு இல்லையாம் மறுபிறப்பே''**

–திருஞானசம்பந்தர்

## தமிழின் மேன்மை சொல்லும் துதிகள்

**தமிழ்மண் டலம் ஐந்தும் தாவிய ஞானம்**
**உமிழ்வதுபோல உலகந் திரிவார்**
**அவிழும் மனமும் எம் ஆதி அறிவும்**
**தமிழ்மண்டலம் ஐந்தும் தத்துவம் ஆமே**

–திருமந்திரம்



tamilnavarasam.com

**சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்**
**மிதாசனி யாதிருந்த தேன்ம நின்ற காலம்**
**இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி**
**உதாசனி யாதுட னேஉணர்ந் தேனே**

—திருமந்திரம்

செந்தமிழர் தெய்வ மறை நாவர்
செழுநற்கலை தெரிந்த அவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்சனைகள்
செய்ய அமர்கின்ற அரனூர்
கொந்தலர் பொழிற்பழன வேலிகுளிர்
தண்புனல் வளம் பெருகவே
செந்திறல் விளங்கிவளர் வேதியர்
விரும்புபத வீழிநகரே - திருஞானசம்பந்தர்

இலைக்குளநீர் அழைத்தனில் இடங்கருற அழைத்ததன்வாய்
தலைக்குதலை மதலையுர் தழைப்ப அழைத் தருளியநின்
கலைக்கும் வட கலையின்முதற் கலைக்குமுறு கணக்குயர் பொன்
மலைக்கும் அணு நிலைக்குமுறா வென்றொண்டப் பெருந்தகையே

-வள்ளலார்

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞானத் திருளகற்றும் —ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ் —தனியன்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நான்கும் கலந்துனக்கு நான் தருவேன் கோலம் செய்
துங்கக்கரிமுகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

—ஔவையார்



RangaRakes

## ஆழ்வார்கள் அருந்தமிழில் செய்த செயல்கள்

சிவபெருமானை அப்பர் ‘தமிழன் கண்டாய்‘ என்று பாடியது போல திருமாலையே ஆழ்வார்கள் தமிழனாக கண்டு பாடிய பாடல்களும் உண்டு. குறிப்பாக இரண்டாம் திருஅந்தாதியில் பூதத்தாழ்வார் பாடிய பாடலைக் கூறலாம். பாடல் வருமாறு

**யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்**
**யானே தவமுடையேன் எம்பெருமான் —யானே**
**இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்**
**பெருந்தமிழன் நல்லேன பெரிதே.**

திருமழிசை ஆழ்வார் தமிழுக்கு திருமால் உள்ளம் பறிகொடுத்தவன் என்பது அவரது வரலாற்றால் தெரிகிறது. ஒரு சூழலில் காஞ்சி திருவெக்கா ஆலய பெருமாளை ஊரை விட்டு கிளம்பு என்று சொல்லிப் பாடிய பொழுது திருமழிசையாழ்வாருடன் பெருமாள் புறப்பட்டுச் சென்றார். நான் திரும்பி விட்டேன் நீயும் திரும்பி உன் பாயலில் படுத்துக்கொள் என்று பாடிய பொழுது திருமழிசை ஆழ்வாரின் அருந்தமிழ் அ[illegible]பு மந்திர சொல்லுக்குக் கட்டளை ஏற்று அப்படியே பணிந்தான், திருமால் சொன்ன வண்ணம் செய்தான் அதனால் அந்த பெருமாளுக்கு சொன்னவண்ணம் செய்த பெருமாள் என்ற பெயரும் நிலை நின்று விட்டது. இதை பலமுறை அருள்திரு தாசர் சுவாமிகள் எடுத்துரைத்துள்ளார்.

புறப்படுக என்று பாடிய பாடல்

**கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீ கிடக்க வேண்டாம் —துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.**



tamilnavarasam.com

திரும்புக என்று பாடிய பாடல்

**கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி**
**மணிவண்ணா நீகிடக்க வேண்டும் –துணிவுடைய**
**செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்**
**பைந்நாகப் பாய்விரித்துக் கொள்.**

ஒரு சமயம் திருக்குடந்தைக்கு சென்று பெருமாள் கோவிலில் திருமழிசையாழ்வார் கிடந்த கோலத்தில் உள்ள ஆராவமுத பெருமாளை தரிசிக்க சென்றார். அது கற்சிலைதான் என்றாலும் திருமழிசையாழ்வார் வருகிறாரே என்று படுத்திருந்த நிலையிலிருந்து அக்கற்சிலை எழுந்து அமர முயர்ச்சித்து பாதி எழுந்தும் பாதி எழுந்திராதும் உள்ள நிலையில் திருமழிசையாழ்வார் "அப்படியே இருக்க" என்று பாடினார். உடனே அருந்தமிழ் மந்திரசொல் கேட்ட திருமால் பாதி எழுந்தநிலையில் அப்படியே நின்றுவிட்டார்.

**நடந்தகால்கள் நொந்தவோ நடுங்கு ஞாலம்ஏனமாய்**
**இடந்தமெய் குலுங்கவோ இலங்கமால் வளரச்சுரம்**
**கடந்தகால் பரந்தகா விரிக்கரைக் குடந்தையுள்**
**கிடந்தவா றெழுந்திருந்து பேசுவாழி கேசனே**

நம்மாழ்வார் தமிழைத் தமிழ்வேதம் என்று பாராட்டுவது வைணவம். 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்று இவரைக் கூறுவர். நாலாயிரப் பிரபந்தம் முழுவதையுமே வைணவர் தமிழ்வேதம் என்று போற்றுவர்.

**எல்லா பழங்களும் ஒரே நேரத்தில் பழுப்பதில்லை. ஒரு கருத்தில் பழுக்கும்பொழுதே வேறு கருத்துக்கள் பிஞ்சு விடும்.**

**பழங்களைப் பிறருக்கு அளி காய்களைப் பொறுமையாகப் பழுக்க வை.**

–சிரீ தாசர்



RangaRakes

திருஞானசம்பந்தரின் பாடல் வரிகள் பெரும்பாலான பெரிய கோயில்களில் தமிழிலேயே வழிபாடுகள் நடைபெற்றன என்பதை பதிவு செய்கிறது.

**"செந்தமிழ் தெய்வமறை நாவர் செழுநற்சுவை தெரிந்த அவரோடு**
**அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்"**

**மற்றும் திருவீழிமிழலையிலும்**

**"ஊறும் இன்தமிழால் உயர்ந்தோர் தொழுது ஏத்தும் தில்லை"**
- திருஞானசம்பந்தர்

வெண்குடையும் பல்லக்கும் திருச்சின்னங்கள் சிவனருள்
வேதநாயகனின் சித்துக்களை கண்டு அனைவரும் வணங்கினரே
வடமொழிப்புலமையும் தமக்கு உண்டென எழுவயதிலேயே
மெய்ப்பிக்கிறார்
வடகயிலையின் திருவருள் ஏக தமிழே சாலும் என மொழிகிறார்
-சிரீ தாசர்

**திருஞானசம்பந்தர் திருகச்சிமேற்றேளி திருமேற்றேளிநாதர் பாடும் போது சிவன் அருகிலிருந்து கேட்டதாக தலவரலாறு உண்டு.**

சிவன் தனது இருப்பிடத்திற்கு வரவைத்து திருஞானசம்பந்தரை தமிழோடு சிவனை சேர்த்துப்பாடிய ஆலயம் தொண்டை நாட்டுத் தலம். திருஇலம்பையங்கோட்டூர் பக்கம் திருஞானசம்பந்தர் வரும் போது இறைவன் சிறுபிள்ளை போலவும், பின்னர் முதியவர் போலவும் வழிமறித்து இக்கோவிலை உணர்த்த உடன் வந்த அடியார்கள் அறியவில்லை. போக வேண்டாம் என மறுத்தனர். இறைவன் பசு வடிவில் வந்து திருஞானசம்பந்தரின் சிவிகையை முட்டி நிறுத்தினார். பிறகு பசு காட்டிய வழி சென்று தலம்



tamilnavarasam.com

வந்ததும் பசு மறைந்தது. இதன் பின் திருஞானசம்பந்தர் இக்கோவிலை பாடினார். இத்தலத்தின் பெருமையை திருஞானசம்பந்தர் தனது பாடல்களில் " எனதுரை தனதுரையாக" என்ற தொடரை எல்லா பாடல்களிலும் வெளிப்படுத்தியுள்ளார். இதை எதற்கு இங்கு வெளிப்படுத்துகிறோம் என்றால் இறைவனை நம் சொந்தமொழியில் துதிபாடும் பொழுது நமக்கு புரிந்துக்கொள்வதற்கு மிகவும் சுலபமாக இருக்கும். இத்தனைக்கும் திருஞானசம்பந்தர் பூநூல் அணிவிக்கும் சடங்கின் போது வயது அப்போது--7. 3--வயது முதலே தமிழிலே இறைவனை பாடி வந்தார். பிரமாணர்கள் திருஞானசம்பந்தரிடம் வடமொழி புலமையை சோதித்தனர். பிராமணர்களுக்கே தெரியாத பல வடமொழி சந்தேகங்களை தீர்த்து வைத்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் வடமொழி நன்கு அறிந்த திருஞானசம்பந்தரே இறைவனை அடைவதற்கு தமிழே போதும் என்றார். கடைசி வரை வடமொழி பாடவில்லை. தமிழிலேயே இறைவனை கயிலாயத்திலிருந்து வரவழைத்து திருஞானசம்பந்தரின் திருமணத்திற்கு வந்தவர்கள் அனைவரையும் இறைவனோடு பேரொளியில் கலக்க வைத்தார். இதனால்தான் **"கூண்டோடு கயிலாயம்"** என்ற பழமொழி திருஞானசம்பந்தரால்தான் வந்தது;. தமிழ் கடவுளாகிய முருகன் ஞானசம்பந்தராக வந்து எல்லா பாடல்களையும் தமிழிலேயே பாடி பல சித்துக்களை செய்து இறைவனடி சேர்ந்தார். தமிழ் மந்திரங்களுக்கு வலிமை உண்டு என்று மெய்பித்துக்காட்டிய அடியார் திருஞானசம்பந்தர் இவருடைய வாழ்க்கைக் குறிப்பே தமிழ் மந்திரங்களுக்கு உதாரணம்.





RangaRakes

## பெண்கள் கருவறை பூசை செய்யலாம்

திருப்பனந்தாளின் வரலாறுகேட்டால் திருமகள்கூட மகிழ்ந்திடுவாள்
திருவானமகளிர் கருவறைபூசை செய்தஅந்நாளைத் தந்திடுவாள்
திருவினார்மீது பக்திகொண்ட தாடகைஎன்னும் தமிழச்சி
திருவினாருக்கு நீராட்டுசெய்து கருவறைபூசை செய்துவந்தாள்

இருகைகளாலும் பூசைப்பொருட்களை எடுத்துசிவன்தலை வைத்தபோது
பெருங்கூட்டம்காண மேலாடைசரியத் துவங்கஅனைவரும் சிரித்தனரே
பெரும்பக்தைஅவள் தாடகைதம்மால் அவமானப்படுவாள் என்றெண்ணி
பெருங்கருணைப்பொருள் பேராளன்சிவன் லிங்கம்சாய்ந்து
துகில்பிடித்தான்

அனைவரும்அரகர என்றேதுதித்து சிவனின்பெருமையைப் போற்றிசெய
அரனாரும்அங்கு சாய்ந்தநிலையில் இருந்தேஅருளின் ஆட்சிசெய்தான்
அந்தணரல்லார் கருவறைபூசைக்குத் தகுதியற்றவர் என்பதுவும்
அந்தப்படியே பெண்களையும்தகுதி நீக்கம்செய்ததும் தவறாகும்

அரனார்க்குசாதி சம்மதமில்லை ஆண்பெண்வேற்றுமை அங்குஇல்லை
அழிச்சாட்டியச் சாத்திரத்தவறால் நம்மதம்பாதியாய்க் குறைந்ததம்மா

சிரீ தாசர்

## தமிழுக்கு இருக்கும் மந்திர ஆற்றல்

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) மைலாப்பூரில் சாம்பலாகிய பூம்பாவை என்ற பெண்ணை தமிழ் மந்திரத்தால் பாடி மீண்டும் உயிர் பெற்று எழ செய்கிறார்.

**மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.**



tamilnavarasam.com

அப்பர் சுவாமிகள் திராவிடர் (Non-Brahmin) சுண்ணாம்பு கால்வாயில் வைத்து சுட்டபொழுது மாசில் வீணையும் என்ற பாடல் பாடி தமிழ் மந்திர ஆற்றலால் ஏழு நாட்கள் வரை உள்ளே இருந்தும் ஏதும் பாதிப்பில்லாமல் வெளியே வந்தார்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈச னெந்தை யிணையடி நீழலே.**

அப்பர் சுவாமிகள் திராவிடர் (Non-Brahmin) மதம் பிடித்த யானையை விட்டு இடறச் செய்த பொழுது அஞ்சுவதியாதொன்று மில்லை என்ற பதிகம் பாடி தமிழ் மந்திர ஆற்றலால் யானையைத் திரும்பிப் போகச் செய்தார்.

**சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட் சூளா மணியும்**
**வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்**
**அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவும்**
**திண்ணன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்**
**அஞ்சுவதி யாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

அப்பர் சுவாமிகள் திராவிடர் (Non-Brahmin) கல்லோடு கட்டி கடலில் போட்டார்கள். அப்பொழுது சொற்றுணை வேதியன் ... என்ற தமிழ் மந்திர பாடல் பாடி அதன் ஆற்றலால் கல்லையே தெப்பமாகச் செய்து கரை வந்து சேர்ந்தார்.

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்**
**கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்**
**நற்றுணை ஆவது நமச்சிவாயவே.**



RangaRakes

சுந்தர மூர்த்தி நாயனார் இறைவனைத் தமிழில் பாடி ஏராளமான அற்புதங்களைச் செய்தார். திரு அவிநாசி புரத்தில் முதலை விழுங்கிய சிறுவனை பல ஆண்டுகள் கழித்து சுந்தரமூர்த்தி நாயனார் கீழ்க்காணும் பதிகம் பாடி தமிழ் மந்திர ஆற்றலால் பாலகனாக மீட்டு தருகிறார்.

**எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே**
**உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்**
**புற்று ஆடு அரவா புக்கொளியூர் அவிநாசியே**
**பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே.**

சுந்தரமூர்த்தி நாயனார் திருவையாறிலே சிவனை தமிழில் பாடி தமிழ் மந்திர ஆற்றலால் காட்டாற்று வெள்ளத்தையே தடுத்து நிறுத்தி சிவபெருமானை பாடி தொழுகிறார்.

**பரவும் பரிசொன் றறியேன்நான்**
**பண்டே உம்மைப் பயிலாதேன்**
**இரவும் பகலும் நினைந்தாலும்**
**எய்த நினைய மாட்டேன்நான்**
**கரவில் அருவி கமுகுண்ணத்**
**தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை**
**அரவந் திரைக்கா விரிக்கோட்டத்**
**தையா றுடைய அடிகளோ.**

சுந்தரமூர்த்தி நாயனார் விருதாச்சலத்தில் சிவன் தந்த பொன்னையும் பொருளையும் மணிமுத்தாறிலே விட்டு, திருவாரூர் குளத்திலே தமிழ் மந்திர ஆற்றலால் பாடி மூழ்கி எடுக்கிறார்.



tamilnavarasam.com

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் எரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடியேன்இட் டளங்கெடவே.

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) தமிழ் மந்திர ஆற்றல் நிறைந்த கோளறு பதிகம் இன்றைக்கும் பிரபலமாக உள்ளது.

வேயுறு தோளி பங்கன், விடமுண்ட கண்டன்,
மிக நல்ல வீணை தடவி,
மாசறு திங்கள் கங்கை முடிமேல் சுமந்து
என் உளமே புகுந்த அதனால்,
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம்
வெள்ளி, சனி, பாம்பிரண்டுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) மந்திரமாவது நீறு என்ற தமிழ் பதிகம் பாடி வெப்பு நோயை தமிழ் மந்திர ஆற்றலால் குணமாக்குகிறார். கூன் பாண்டியனின் உடலை தமிழ் மந்திர ஆற்றலால் நிமிர்த்தி நின்றசீர் நெடுமாறனாக ஆக்குகிறார்.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.



RangaRakes

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) அனல் வாதம் புனல் வாதம் இவைகளையெல்லாம் தமிழ் மந்திரங்களால் பாடி வெல்லுகிறார்.

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) திருமருகல் என்ற தலத்தில் பாம்பு கடித்து இறந்த வணிகனை தமிழில் பாடி தமிழ் மந்திர ஆற்றலால் உயிர்பெற்று எழச் செய்கிறார்.

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) திருபாச்சிலாச்சிரமத்தில் இளவரசிக்கு பிடித்திருந்த ராட்சசனை தமிழில் பாடி தமிழ் மந்திர ஆற்றலால் விரட்டி குணமாக்குகிறார்.

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ வாரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோல மெலாஞ்செய்து பாச்சி லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட மயல்செய்வ தோயிவர்
மாண்பே.

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) திருக்கொள்ளம்புதூரில் காட்டாற்று (ஓடம் போக்கியாறு) வெள்ளத்தில் தமிழ் மந்திரங்கள் பாடி தமிழ் மந்திர ஆற்றலால் ஓடத்தினை தானாக செல்லுமாறு செய்து பரிவாரங்களோடு அக்கரைக்கு சென்று சிவபெருமானை தரிசிக்கிறார்.



tamilnavarasam.com

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) திருவோத்தூர் காய்க்காத ஆண் பனை மரங்கள் எல்லாம் தமிழ் மந்திர ஆற்றலால் பெண் பனை மரங்களாக மாறி காய்க்கத் துவங்கின.

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஒத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) திருச்செங்குன்றூரில் பனிகாய்ச்சலால் வாடிய ஊர் மக்களையும், தன்னுடைய ஐநூறு சீடர்களையும் தமிழில் பாடி தமிழ் மந்திர ஆற்றலால் பனிநோய் நீக்கி காத்தருளினார்.

அவ்வினைக்கு இவ்வினை ஆம் என்று சொல்லும் அஃது அறிவீர்!
உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம் அன்றே?
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாம் அடியோம்
செய்வினை வந்து எமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்.!

திருஞானசம்பந்தர் திராவிட அந்தணர் (Non-Brahmin) திருவீழிமிழலையில் தங்கியிருந்த காலத்தில், மழையின்மையால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. தமிழில் பாடி, தமிழ் மந்திர ஆற்றலால் பஞ்சம் போக்கினார்.



RangaRakes

வாசிதீரவே, காசு நல்குவீர்
மாசுஇல் மிழலையீர் ஏசல் இல்லையே
இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே

திருஞானசம்பந்தர், அப்பர் திராவிடர் (Non-Brahmin) திருமறைக்காட்டில் ஆலய கதவு முடியிருக்க தமிழ் மந்திர ஆற்றலால் அப்பர் திறக்கவும், திருஞானசம்பந்தர் கதவு மூடவும் பாடினார்கள்.

பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே உடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருக என் றருள்புரி யாயே.

–அப்பர்

சதுர மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக்காட்டு உறை மைந்தா!
இது நன்கு இறை வைத்து அருள்செய்க, எனக்கு உன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே!

–சம்பந்தர்

திராவிடர் திருநாவுக்கரசருக்கு, திராவிட அந்தணர் திருஞானசம்பந்தர் (Non-Brahmin) திருவாய்மூரில் சம்பந்தர் நடராச பெருமானின் ஆடல் காட்சி காண்கிறார் பிறகு அப்பருக்கும் தமிழ் மந்திர ஆற்றலால் நடராச பெருமானின் ஆடல் காட்சி திருவாய்மூரில் காட்டினார்.



tamilnavarasam.com

**தளிரிள வளரென வுமைபாடத் தாளம் மிடவோர் கழல்வீசிக்**
**கிளரிள மணியர வரையார்த் தாடும் வேடக் கிறிமையார்**
**விளரிள முலையவர்க் கருணல்கி வெண்ணீ றணிந்தோர்**
**சென்னியின்மேல்**
**வளரிள மதியமொ டிவராணீர் வாய்மூ ரடிகள் வருவாரே.**

சாரி புத்தன் என்பான் தர்க்க வாதம் புரியுமாறு ஞானசம்பந்தரை அழைத்த போது, சம்பந்த சரணாலயர் திராவிடர் (Non-Brahmin) கீழ் வரும் பாடலை பாடியதுடன் சாரி புத்தன் தலையில் இடி விழுந்தது.

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே.

இவ்வளவு ஆற்றல் மிக்க தமிழில் மந்திரம் என்ற பெயரிலேயே திருமூலரின் 3000 திருமந்திரங்கள் இருக்க தமிழர்களாகிய நாம் அவைகளை பயன்படுத்தி இறை காரியங்களை செய்வதல்லவோ ஏற்றம் பெரும். தமிழ் நாட்டில் இருப்பவர்களுக்கே தமிழ் மந்திரங்கள் இருப்பதே தெரியாமல் இருப்பது பரிதாபகரமான நிலைமையல்லவா ?

## கம்பராமயணம்

தமிழுக்கு இருக்கும் மந்திர ஆற்றல் கம்பராமாயணம் உருவான விதம் பற்றி சிரீ தாசர் சுவாமிகளின் விளக்கம். கம்பர் சிரீ ரங்கம் ரங்கநாயகியின் முன் அமர்ந்து ராமாயணத்தை ஒரு பாடல் எழுதி முடித்தவுடன் ரங்கநாயகியை பார்ப்பார் ரங்கநாயகி தலை அசைத்தவுடன் பிறகுதான் கம்பர் அடுத்த பாடல் எழுதுவாராம். இவ்வளவு இசைவு தமிழோடு இறைவனும், இறைவியும் அடியார்களும் திருவிளையாட்டுகள் ஏராளம் ஏராளம்.



RangaRakes

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவு இல்லை
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

– திருஞானசம்பந்தர்

வானத்துப் பூமழையும் பூமிக்கு வந்திருக்க
வாராநாள் வந்ததென்று பாடுங்கள்
வசந்தம் நமக்கு என்றும் வானத்தில் பூத்திருக்கும்
வந்தனை செய்திருப்போம் வாருங்கள்

– <u>சிரீ தாசர்</u>

63– நாயன்மார்கள் பற்றி அனைவரும் புரிந்துக்கொள்ளும் படி எளிமையான தமிழ் சொற்களால் புரிந்துக்கொள்வதற்கும் உணர்வு பூர்மாக இறைவனை நினைப்தற்கு வழி செய்யும் நாயன்மார்கள் பற்றி நாட்டிய கணோலிகலாகவும் கீழே உள்ள பேஸ்புக் என்ற முகப்பு முகவரியில் பார்க்கலாம்.

https://www.facebook.com/63Nayanmars

<u>சிரீ தாசர் சுவாமிகளின் அருளுரை கேட்க கீழே கொடுக்க youtube-முகவரியில்</u>

<u>https://www.youtube.com/channel/UC5xftlEo0vkcKQXtMWZ3B4A</u>

சாதி அறிவு கெடாத முண்டங்களுக்கு மத்தியில்
சாதி அறிவு கெட்ட முண்டமாகத்தான்
காளியின் காலடியில் கிடந்தேன் ஒருமுறை
தலைமாலையிலிருந்து
மேதை தலையை எடுத்து வைத்து
**மகாகவி காளிதாசனாய்** அழகு பார்த்தாள் அன்னை
இன்றும் வந்து **காளிதாசா** என்றழைத்தாள் என்னை.

**<u>சிரீ தாசர்</u>**



tamilnavarasam.com

# திருமூலர் திருமந்திரம் பற்றி

**மந்திரம் சொல்வதின் பயன் என்ன ?**

ஒரு பெயரை திரும்பத் திரும்ப நினைவிற்குக் கொண்டுவரும் திறம் மன்னுகின்ற திறம் மந்திரம்.

— சிரீ தாசர்

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
**என்னைநன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே** —திருமூலர், திருமந்திரம்

திருமூலரின் திருமந்திரத்திற்கு சிரீ தாசர் சுவாமிகள் கொடுக்கிற விளக்கம் என்னவென்றால் தமிழில் எதுகை மோனை சொல் நயம் மிக அழகாக இருக்கும். திருமூலர் 3000 வருடம் தவமிருந்து உருவாக்கிய நூல். ஒவ்வொரு ஆண்டு தவம் முடிந்தவுடன் கிடைத்ததை உண்பார். திருமந்திர பாடல் ஒன்றை சொல்வார் மீண்டும் தவத்திற்கு சென்றுவிடுவார். இவ்வாறு 3000 வருடம் தவமிருந்து இயற்றிய எழுதிய நூலே தமிழ் திருமந்திரம் என்று அழைக்கப்படுகிறது.

**சொல்லியப்பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்**
**செல்வர் சிவபுரத்தில் உள்ளார்**
சிவனடிக்கீழ் பல்லோரும் ஏத்தப் பணிந்து.
இவ்வாறு மாணிக்கவாசகர் சிவனைப் பாடுகின்றார்

நம் பாரத நாடு ஆன்மீக ரீதியாக தனிப்பெருமை வாய்ந்த நாடாக திகழ்கிறது. உலக நாடுகளின் பார்வையில் இந்தியா ஆன்மீக நாடாக காட்சியளிக்கிறது. அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த இறைவன் இந்தியாவை தன் வீடாக கொண்டு பல்வேறு லீலைகளை இங்கு நடத்தி வருகிறார். இங்கு தான் எண்ணற்ற மகான்களும், யோகிகளும் இறைவனை நேரில் கண்டும், அவனுடன் இரண்டற



RangaRakes

கலந்தும் உள்ளனர். அவ்வாறு இறைவனை காண்பதற்கும், அவனை சென்று அடைவதற்கும் உரிய வழிமுறைகள் அனைத்தையும் நூல்கள் வாயிலாகவும், கலைகள் மூலமாகவும் நம்மிடையே கொடுத்தும் சென்றுள்ளனர். அவ்வாறு மகான்களையும், யோகிகளையும் பின்பற்றி இன்றளவும் நிறைய மகான்கள் நம்மிடையே தோன்றி அருள்புரிந்து வருகின்றனர்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த நம் பாரத நாட்டில் இன்று உழைப்புக்காகவும் ஆன்மீகம், பிழைப்புக்காகவும் ஆன்மீகம் என்ற நிலை உருவாகியுள்ளது. இறைவனை காணவேண்டும், இறைவனை சென்று அடைய வேண்டும் என்ற உயர் நோக்கிற்காக விடாமுயற்சியுடன் உடல் உழைப்பையும், மன உழைப்பையும் ஒருசேர கொடுத்துக் கொண்டிருக்கும் அடியார்கள் மத்தியில், தன்னுடைய பிழைப்பிற்காகவும், தன்னைச் சார்ந்த சமுதாயத்தின் பிழைப்பிற்காகவும் ஒருசாரர் ஆன்மீகத்தையும், இறைவனையும் பயன்படுத்தி வருகின்றனர். இன்று இறை ஆலயங்கள் அனைத்திலும் இவர்களது பிழைப்பு வெகுசிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இவர்கள் தங்களுடைய பிழைப்பு சரியாக நடைபெற வேண்டும் என்பதற்காக, பாமரனும், பக்தர்களும் இறைவனை தெரிந்து கொள்ளாதவாறு பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர். எனவே இறை தாகம் உள்ள அன்பர்களும், பக்தர்களும் இது போன்ற ஆன்மீக வியாபாரிகளை நம்பி அவர்கள் கூறும் சடங்கு, சம்பிரதாயம், வர்ணாச்ரம தர்மம் போன்ற விசயங்களில் ஈடுபடாமல் உண்மை நிலை அறிந்து, உள்ளபடி இறைவனைத் தொழுவதற்கும் அவனை அறிந்து அவனடி அடையவும் சரியான அடியார்களையும், இறைவனைத் தெரிந்த மகான்களையும் நாடி அவர்கள் வழிகாட்டுதலின் பேரில் இறை இன்பம் எய்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



tamilnavarasam.com